


இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம். அவளூர் ஊராட்சி ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்”திட்ட முகாமினை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி பார்வையிட்டு உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்கள் மீது பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் ஒன்றியகுழுத் தலைவர் அனிதா குப்புசாமி, காவேரிப்பாக்கம் ஒன்றியகழக செயலாளர் ஒச்சேரி பாலாஜி, பொதுக்குழு உறுப்பினர் சி.மாணிக்கம் ஒன்றிய அவைத் தலைவர் எம் .ஆர். லட்சாதிபதி துணை செயலாளர்கள் டி.வேதாந்தம் ,பூரி என்ற அன்பரசு, மாவட்ட பிரதி என்.சக்தி, ஜாகிர் உசேன் ,கிளை செயலாளர்கள் செந்தில், அன்பழகன் ,குமரேசன், சேகர் மாவட்ட தொண்டரணி தலைவர் எஸ்.வெங்கடேசன் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எஸ்.சதீஷ் ஒன்றியக்குழு உறுப்பினர் வசந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் சலவாதி, வேங்கை ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய சேர்மன் தயாளன், துணைச் சேர்மன் பழனி, மத்திய ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் மணிமாறன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### ரூ.25.89 கோடி மதிப்பில் முடிவுற்ற 5 திட்டப்பணிகளைத் திறந்து வைத்தார்!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - ரூ.124 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல்!

## 837 பயனாளிகளுக்கு ரூ.10.84 கோடி மதிப்பில்–அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

**சென்னை, செப்.25-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2025) விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 25.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 124.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 837 பயனாளிகளுக்கு 10.84 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகள்!**

இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 5.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில்கட்டப்பட்டுள்ளதிருவில்லிப்புத்தூர் வட்டாட்சியர் அலுவலகம், நீர்வளத் துறையின் சார்பில் திருச்சுழி வட்டம், கீழ்செம்பூர் கிரா மத்தில் 9.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிருதுமால் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு, ராஜபாளையம் நகராட்சியில் உரம் தயாரிக்கும் தளத்தின் மேற்கு, கிழக்குப்பகுதி களில் தலா 85.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டு மானங்கள், 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஸ்ரீரெங்கப்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள இணைப்பு சாலை, 2.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிங்கராஜ கோட்டைபெரியதெருபழையபாளையம் குமரன் தெரு ஜவஹர் மைதானம் - மலையடிப்பட்டி ஆர்.ஆர்.நகர் ஆகியவற்றை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலை, 58.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவனந்தபுரம் 6, 5வது தெருக்களை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலை, 31.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஸ்ரீரெங்கபாளையம் சாலை - சங்கரன் கோவில் 7வது குறுக்குத் தெரு ஆகியவற்றை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலை, 22.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாரதியார் நகரில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலை, 3.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டி.பி.மில்ஸ் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலைகள்,

33.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திரௌபதியம்மன் கோவில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலை, ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சியில் 71.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிடுமினஸ் சாலை - அசோக்நகர் தெரு - பள்ளிவாசல் தெரு - அசோக் நகர் முதன்மை சாலை - கல்லணை ஓடைத் தெரு ஆகியவற்றில் சீரமைக்கப்பட்ட சாலைகள்,

விருதுநகர் நகராட்சியில் 35.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தங்கமை பெரியசாமி நாடார் மகளிர் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் சீரமைக்கப்பட்ட கலையரங்கம், 32.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே பீடர் ரோடு - கே.ஆர். கார்டன் குறுக்குத் தெரு 1வது காலனி - மதுராகோட்ஸ்காலனி–கணேஷ்நகர் 2 ஆகியவற்றை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்ட தார்சாலைகள், 58.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கணேஷ் நகர் 4,5,7 - லட்சுமி காலனி குறுக்குத் தெரு 1கே.ஆர்.கார்டன் குறுக்குத் தெரு 3 - லட்சுமி காலனி குறுக்குத் தெரு ஆகியவற்றில் அமைக்கப்பட்ட தார்சாலைகள், 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கே.ஆர் கார்டன் குறுக்குத் தெரு1 - கணேஷ்நகர் 3 - குட்செட்ஸ் சாலை - பட்டேல் சாலை ஆகியவற்றில் அமைக்கப்பட்ட தார் சாலைகள், 12.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் A.S.P.C.C உயர்நிலைப் பள்ளியில் கட்டப்பட்ட சுகாதார வளாகம் என மொத்தம் 25.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

**அடிக்கல் நாட்டப்படவுள்ள பணிகள்!**

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், ஜோகில்பட்டி ஊராட்சி, இராஜபாளையம் வட்டம், மேலப்பாட்டம் கரிசல்குளம் ஊராட்சி, அருப்புக்கோட்டை வட்டம், செட்டிக்குறிச்சி ஊராட்சி ஆகிய 3 இடங்களில் தலா 3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் சிறுவிளையாட்டு அரங்கம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் விருதுநகர் மாவட்டம், செட்டிக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் 74.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்று வகுப்பறை கட்டடம் கட்டும் பணி, நாலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 59.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறைகள் மற்றும் ஒரு கழிப்பறை கட்டடம் கட்டும் பணி,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் படந்தால் கிராமத்தில் 35.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்து டன் கூடிய குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் அருப்புக் கோட்டை தலைமை மருத்துவமனையில் 38.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் யோகா இயற்கை முறை பிரிவு கட்டடம் கட்டும் பணிகளுக்கும்,

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் விருதுநகர் கிருஷ்ணாபுரம் சாலையை 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 கி.மீ நீளத்திற்கு பாவு தளத்துடன் கூடிய இருவழித்தடமாக மாற்றி அமைக்கும் பணிக்கும், சிவகாசி மாநகராட்சியில் 58.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6.7 கி.மீ நீளத்திற்கு இரண்டாம் கட்டமாக சுற்றுவட்டச்சாலை அமைக்கும் பணிக்கும் என மொத்தம் 124.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**நலத்திட்ட உதவிகள்!**

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 5.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 400 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்ப ட்டாக்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 219 நபர்களுக்கு ஆதிதிராவிடர் நல இலவச வீட்டுமனை இ - பட்டாக்களையும், கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 2 நபர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும்,

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதா தொழில் முனைவுத் திட்டத்தின் கீழ் 10 நபர்களுக்கு 31.50 இலட்சம் ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 16 நபர்களுக்கு 3.13 கோடி ரூபாய்க்கான வங்கி கடன் இணைப்புகளையும், சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் அட்டைகளை 50 நபர்களுக்கும், புதிய குடும்ப அட்டை 20 நபர்களுக்கும்,

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 நபர்களுக்கு ஆவின் பாலகம் அமைக்க தலா ரூ.50,000-மும், 9.45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 9 நபர்களுக்கு மின்கலத்தால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகளையும், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் கலைஞர் கைவினைத் திட்டத்தின் 4 நபர்களுக்கு 1.75 இலட்சம் ரூபாய்க்கான மானிய உதவிகளையும்,

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 5 நபர்களுக்கு 27.58 இலட்சம் ரூபாய் மானிய உதவிகளையும், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 4 நபர்களுக்கு 4.48 இலட்சம் ரூபாய் மானிய உதவிகளையும், புதிய தொழில் முனைவோர்கள் திட்டத்தின் கீழ் 1 நபருக்கு 4.40 இலட்சம் ரூபாய் மானிய உதவியையும் உள்பட பல்வேறு துறைகளின் சார்பில் 837 பயனாளிகளுக்கு 10.84 கோடி ரூபாய்க்கான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பாராளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், எஸ்.தங்கபாண்டியன், ஜி.அசோகன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, சீர்மரபினர் நலவாரிய துணைத் துணைத் தலைவர் இராசா அருண்மொழி, காவல் கண்காணிப்பாளர் தெ.கண்ணன், த.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர், இரா.ராஜேந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### புதுவை மாநிலக் கழக அமைப்பாளர் இரா.சிவா பங்கேற்பு !

# புதுச்சேரியில் 5-வது முறையாக தி.மு.க.ஆட்சி அமைக்கும்!

## புதுவையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டி !

புதுவை, செப். 25-

2026 தேர்தலில் புதுச்சேரியில் தி.மு.க. 5-வது முறையாக ஆட்சி அமைக்கும் என்றும் அதற்கான பணி அக்டோபர் 1ஆம் தேதி முதல் தொடங்கப்படும் என்றும் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்தார்.

புதுச்சேரி மாநிலம் கதிர்காமம் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை திறப்பு விழா, கலைஞர் நூலகம் திறப்பு விழா மற்றும் கதிர்காமம் தொகுதி தி.மு.க. அலுவலக திறப்பு விழா என முப்பெரும் விழா சண்முகாபுரம் காவல் நிலையம் அருகில் நடைபெற்றது.

கதிர்காமம் தொகுதி கழகச் செயலாளர் ப.வடிவேல் தலைமை தாங்கினார். பொதுக்குழு உறுப்பினர் ந. தங்கவேல், தொகுதி துணைச் செயலாளர் தங்க. தமிழ்வாணன் முன்னிலை வகித்தனர்.

விழாவில், தலைமைக் கழக அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ஆர்.எஸ். பாரதி அவர்களும், புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவாவும் கலந்து கொண்டு, கலைஞர் திருவுருவச் சிலை, நூலகம் மற்றும் கழக அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.



இந்த விழாவில், அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வி.அனிபால் கென்னடி, இரா.செந்தில்குமார், எல். சம்பத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், துணை அமைப்பாளர்கள் குமார், தைரியநாதன் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முகிலன், டாக்டர் நித்திஷ் தொகுதி செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ் பாரதி, புதுச்சேரி யில் ஏற்கனவே பாரூக் மரைக்காயர், எம்.டி.ராமச்சந்திரன், ஆர்.வீ. ஜானகிராமன் என 3 முதலமைச்சர்கள் தி.மு.க. சார்பில் இருந்துள்ளார்கள். 4 முறை ஆட்சியமைத்துள்ள நிலையில் தற்போது 5வது முறையாக தி.மு.க. ஆட்சி அமைக்க உறுப்பினர் சேர்க்கை என்பது நடைபெறவுள்ளது. அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெறும் வகையில் உழைத்துக் கொண்டு இருக்கிறோம் என தெரிவித்தார். மேலும் தொகுதிப் பங்கீடு குறித்து உள்ளூர் தலைவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் அதுகுறித்து இறுதி முடிவை ராகுல் காந்தியும், ஸ்டாலினும் தான் எடுப்பார்கள் என கூறினார்.

மேலும் தமிழகத்தில் தி.மு.க.வுக்கு நாங்கள் தான் போட்டி என அ.தி.மு.க., - த.வெ.க. போன்ற கட்சிகள் சொல்கிறார்கள், எங்களுக்கு யார் போட்டி என்பது தேர்தல் நேரத்தில் தான் தெரியும், தற்போதைய சூழலில் நாங்கள் வலுவாக உள்ளோம் என தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் 2019ல் இருந்தே எடப்பாடி பழனிசாமி எங்கள் கூட்டணியில் இருந்து பல கட்சிகள் வெளியேறும் என சொல்லிக்கொண்டு இருக்கிறார், ஆனால் தற்போது அவர் கட்சியில் இருந்தே பாதி பேர் வெளியேறிவிட்டனர். முதலில் எடப்பாடி அவர் நிலைமையை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் எனக் கூறினார்.

அப்போது விஜய் செல்லும் இடமெல்லாம் அதிக கூட்டம் கூடுவதை எப்படிப் பார்கிறீர்கள் என செய்தியாளர்கள் கேள்வி எழுப்ப அதற்கு பதில் அளித்த அவர், கடந்த 76 வருடத்தில் பெரிய பெரிய ஜாம்பவான்களை எல்லாம் சந்தித்த கட்சி தி.மு.க., தயவு செய்து விஜய் பற்றி கேட்காதீர்கள் என்றும், கூட்டத்தை கூட்டிவிட்டார் என்பதற்காக ஒருவர் அரசியலில் நிலைத்துவிட முடியாது என்றும் கூட்டத்தை கூட்டியும் இன்று அரசியலில் தடம் தெரியாமல் போனதற்கு பல பேர் எடுத்துக்காட்டாக உள்ளனர்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி கூறினார்.



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வேலூர் கோ ஆப் டெக்சில்பட்டு மற்றும் பருத்திரக விற்பனையை மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் வீனஸ் ஆர்.நரேந்திரன், கைத்தறி உதவி இயக்குனர் அன்பரசு, மாநகராட்சி உறுப்பினர் வி.எஸ்.முருகன், மண்டல மேலாளர் ரத்னா, சந்துரு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# பொய் சொல்லக் கூடாது, எடப்பாடியாரே!

எடப்பாடி சொல்கிறார் :
“துணி கொண்டு முகத்தைத் துடைத்தேன்; மறைத்தேன்
என்று ஏன் சொல்கிறீர்கள்? மானம் போகுதே!”
மானம் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?
கவரிமான் கூட்டம் கவலைப்படும்!
முகத்தில் துணியை ஒத்தி எடுத்தால் துடைப்பதாகும்;
பொத்தி வைத்தால் மறைப்பதாகும்!

உண்மையைச் சொல்ல நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் வேண்டும்!
பொய் சொன்னாலும் பொருத்தமாகச் சொல்ல வேண்டாமா?
‘மார்க்சியம்’ தெரியாமல் மார்க்சிஸ்ட் கட்சிக்குத் தலைமை ஏற்க முடியுமா?
‘திராவிடம்’ தெரியாமல் திராவிடக் கட்சிக்குத் தலைவர் என்றால் ஏற்க முடியுமா?

அண்ணாவின் கொள்கைகள் பற்றிய அறிவுமில்லை!
‘ஆரியமாயை’ பற்றிய தெளிவுமில்லை!
அருள்கூர்ந்து கட்சிப் பெயரை மாற்றிவிடுங்கள்!
‘பாரதிய அடிமைகள் கழகம்’ என்பதுதான் சரியாக இருக்கும்!
நீங்கள் கட்சிப் பெயரை மாற்ற மாட்டீர்கள்; எங்களுக்குத் தெரியும்!
நீண்டகாலம் மக்களை ஏமாற்றும் கலையை கற்றுத் தேர்ச்சி பெற்று விட்டீர்கள்!

உண்மை உணர்ந்து, உங்கள் கூடாரம் காலியாகிக் கொண்டிருக்கிறது!
உங்கள் கூடா நட்பு தீயாய்ச் சுடும்; கேடாய் முடியும்!
மானமும் அறிவும் துணிவும் கொண்ட தமிழ் மகன்
தலைமையில், அண்ணா உருவாக்கிய கழகம்
வீறுநடைபோடும்; வெற்றி பல குவிக்கும்!



பேராசிரியர் அலவை **பெ.மாணிக்கம்**
அசோக் நகர், சென்னை - 83.